2014

2014

No. of Printed Pages : 4

**4427**

Register Number

**First Year**

602350

# சமூக அறிவியல் கற்பித்தல்

# TEACHING OF SOCIAL SCIENCE

(Tamil Version)

நேரம் : 3 மணி ] [ உச்ச மதிப்பெண்கள் : 100

**பிரிவு - I**

(பாடப்பொருள்)

**பகுதி - அ**

**I.** பின்வரும் வினாக்கள் **அனைத்திற்கும் 100 வார்த்தைகளுக்கு** மிகாமல் விடையளிக்கவும். **10x2=20**

1. ஆங்கிலேயர் ஆட்சியில் இந்தியப் பொருளாதார நிலை எவ்வாறிருந்தது?
2. தீன் - இலாஹி - சிறு குறிப்பு வரைக.
3. "கீழ் நோக்கிக் கசிதல் கோட்பாடு" - வரையறை செய்க.
4. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரை (Preamble) அறிவிக்கும் தத்துவ நோக்கங்களில் எவையேனும் நான்கினைக் குறிப்பிடுக.
5. இந்திய அரசியலமைப்பில் நமக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளில் ஏதேனும் நான்கினை எழுதுக.
6. இந்தியக் குடியரசுத் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள நீதித்துறை அதிகாரங்கள் யாவை?
7. வால் நட்சத்திரத்திற்கும், எட்மண்ட் ஹேலி என்பவருக்கும் உள்ள தொடர்பைக் கண்டுபிடிக்கவும்.
8. கோளை, துணைக் கோளிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுக.
9. பீட பூமிகளை வகைப்படுத்தி, உதாரணம் தருக.
10. எரிமலை வெடிப்பு, காலநிலையை எவ்வாறு பாதிக்கிறது?

[ Turn over

## பகுதி - ஆ

II. கீழ்க்காணும் வினாக்களில் **எவையேனும் ஐந்து வினாக்களுக்கு** மட்டும் **200 வார்த்தைகளில்** விடையளிக்கவும். **5x4=20**

11. தமிழ்நாட்டிலுள்ள தொழிற்சாலைகளில் எவையேனும் நான்கினைக் குறிப்பிட்டு அவை அமைந்துள்ள இடங்களையும் எழுதுக.

12. இந்திய அரசியலமைப்பின் சிறப்பியல்புகளைத் தொகுத்து எழுதுக.

13. மகளிர் மேம்பாட்டிற்காக இயற்றப்பட்டுள்ள இந்திய சட்டங்களை, அவை இயற்றப்பட்ட ஆண்டுகளுடன் பட்டியலிடுக.

14. மக்களவை, மாநிலங்களவை - ஒப்பிடுக.

15. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் கல்வி தொடர்புடைய சரத்துகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

16. இந்திய உச்சநீதி மன்றத்தின் அதிகாரங்களைச் சுருக்கமாக விளக்குக.

17. சூரிய கிரகணம் நிகழும்போது நிலவின் தோற்றத்தில் ஏற்படும் மாற்றங்களை படம் வரைந்து விளக்குக.

18. சமவெளியின் வகைகளை உதாரணத்துடன் விளக்கு.

## பிரிவு - II

(கற்பிக்கும் முறை)

## பகுதி - அ

III. கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்கள் **அனைத்திற்கும் 100 வார்த்தைகளில்** விடையளிக்கவும். **10x2=20**

19. சமூக வளர்ச்சியில் சமூக அறிவியலின் பங்கு என்ன?

20. செயல்திட்ட முறை பற்றி கில் பேட்ரிக் (Kil Patrick)-ன் கருத்தைக் கூறுக.

21. தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கான செயல்திட்ட தலைப்புகள் நான்கினை எழுதுக.

22. முக்கிய அட்சக்கோடுகளை வரைந்து பெயரிடுக.

23. "தொலை உணர்தல்" (Remote Sensing) என்றால் என்ன என்பதை உனது சொந்த கூற்றுகளில் வரையறை செய்க.

24. "கருத்தரங்கு" - பொருள் கூறுக.

25. களப் பயணத்தின் வகைகள் யாவை?

26. உமது நிறுவனத்தில் நீவீர் களப்பயணம் மேற்கொண்டபின் செய்த தொடர் பணியை எடுத்துரைக்கவும்.

27. செயல் வழிக் கற்றலில் குழு அட்டைகளுக்கும், குழுக்களுக்கும் உள்ள தொடர்பு யாது?

28. செயல்வழிக் கற்றலில் மூன்று மற்றும் நான்காம் வகுப்பு சமூகவியலில் எத்தனை மைல்கற்கள் உள்ளன?

## பகுதி - ஆ

IV. பின்வருவனவற்றுள் **ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு 200 வார்த்தைகளில்** விடையளிக்கவும். **5x4=20**

29. சமூக அறிவியல் கற்பித்தல் குழந்தைகளிடையே ஒழுக்கத்தை எவ்வாறு மேம்படுத்துகிறது?

30. "சமூக அறிவியல் கற்பதில் நிலவரைபடப்புத்தகம் (Atlas) பெரும்பங்கு வகிக்கிறது" - கூற்றை நிரூபி.

31. உமது மாணவர்களுக்கு நிலவரைபடம் (Map) வரையும் திறனை எவ்வாறு வளர்ப்பீர்?

32. கருத்தரங்கு நடத்தும் முறையை உமது சொந்த வார்த்தைகளில் விவரிக்கவும்.

33. களப்பயணத்தின் முக்கிய இலக்குகளை எழுதுக.

34. "செயல்வழிக் கற்றல் மகிழ்வுறு கற்றல்" காரணங்கள் கூறுக.

35. செயல்வழிக் கற்றலில் "பொம்மலாட்டம்" மூலம் மாணவர்கள் பெறும் திறன்களைப் பட்டியலிடுக.

36. முழுமையான களப் பயணத்தின் படிநிலைகளை வரிசைப்படுத்துக.

[ Turn over

## பிரிவு - III

**V.** கொடுக்கப்பட்டுள்ள உலக புறவரி (World - Outline) நிலவரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும். அதனைத் தொடர்ந்து வரும் வினாவிற்கு 500 வார்த்தைகளில் விடையளிக்கவும். **2x10=20**

**37.** (a) (i) இந்தியா (ii) மத்திய தரைக்கடல்

(iii) சவுதி அரேபியா (iv) ஆஸ்திரேலியா

(v) ஆப்ரிக்கா (vi) மலேசியா

(vii) ஜப்பான் (viii) தென் அமெரிக்கா

(ix) மடகாஸ்கர் (x) கிரீன்லாந்து

(b) "சமூக அறிவியல் பல்வேறு பாடங்களுடன் தொடர்புடையது" என்ற கருத்தை நிலை நிறுத்துக.

(c) இந்தியப் புறவரி (India - Outline) நிலவரைபடத்தில் பின்வருவன-வற்றைக் குறிக்கவும்

(i) கடகரேகை (ii) கட்ச் வளைகுடா

(iii) சில்கா ஏரி (iv) வங்காளவிரிகுடா

(v) லட்சத் தீவுகள் (vi) மன்னார் வளைகுடா

(vii) தார் பாலைவனம் (viii) புது டெல்லி

(ix) இந்தியப் பெருங்கடல் (x) சென்னை

(d) ஆதார திசைக்கோடு (Base Direction) நிலவரைபடத்தில் எவ்விடத்தில் குறிக்கப்பட்டிருக்கும்? பதினாறு திசைகளையும் குறிக்கும் படத்தினை வரைந்து பெயரிடுக.

**38.** (a) ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் "வானிலை அறிக்கை" என்ற தலைப்பில் செயல்திட்டம் மேற்கொள்வதற்கான படிநிலைகளை விளக்குக.

**அல்லது**

(b) உமது நிறுவனத்தில் சமூக அறிவியல் தொடர்பாக நீவீர் சமர்ப்பித்த கருத்தரங்கத் தலைப்பை விவரிக்கவும்.

-oOo-